www.tamilarangam.net


# புதியகண்ணோட்டம்

The NEW PERSPECTIVE

வெளியீடு—5 | 1988 ஆடி 01. | விலை ரூ: 2/-


அரசபடைகளினாலும் தமிழ் இயக்கங்களினாலும் தமிழ் மக்கள் மத்தியில் நடத்தப்பட்டுள்ள

கொலைகள் கொள்ளைகள் பற்றிய விபரங்களைத் திரட்ட

# விசாரணை ஆணைக்குழு

ஒன்று ஜனநாயக சக்திகளினால் உருவாக்கப்படவுள்ளது.

## ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் முன்முயற்சி

கடந்த ஐந்து ஆண்டுகளாக தமிழ் மக்கள் மத்தியில் படுகொலைகளும், கொள்ளைகளும் மிக அதிகளவில் இடம் பெற்று வந்துள்ளன. பல கொலைகளும், பெரும்பாலான கொள்ளைச் சம்பவங்களும் யாரால் மேற்கொள்ளப்பட்டன என்று அடையாளம் காணப்படாமல் உள்ளன.

அரசபடைகளினால் மேற்கொள்ளப்பட்ட கொலைகள், கொள்ளைகள், கற்பழிப்புகள் தீப்புரத்தல்கள் என்பன ஓரளவு அடையாளம் காணப்பட்டபோதிலும் -

தமிழ் மக்களின் விடுதலையின் பேரால் உருவான இயக்கங்கள் நடத்திய கொலைகள், கொள்ளைகள், சேதங்கள் இன்னும் பெரும்பாலும் அடையாளம் காணப்படாமல் உள்ளன.

உயிர்களையும் உடைமைகளையும் இழந்தவர்களுக்குக் கூட யாரால் அது நேர்ந்தது என்று தெரியாமல் இருக்கின்றது.

புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளை வெறுமனே அரசபடைகள் ஏற்படுத்திய பாதிப்புக்களிலிருந்து மட்டும் பார்க்காமல் -

மொத்தப் பாதிப்புக்களைக் கணக்கில் எடுப்பதற்கும்,

அதற்கான மறுசீரமைப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கும் மட்டுமல்லாது,

தமிழ் மக்களின் விடுதலை என்னும் அடிப்படையில் நடைபெற்ற போராட்டத்தில் மொத்தமாக என்ன நடந்தது என்பதை தமிழ் மக்களும் உலகமும் பகிரங்கமாக அறிவதற்கு இவ் ஏற்பாடு தேவைப்படுகின்றது என ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி கருதுகின்றது.

இந்த விசாரணையை இயக்கங்களோ, அரச நிர்வாகங்களோ மேற்கொண்டால் பல விடயங்கள் மறைக்கப்பட்டுவிடும் உண்மைகள் திரிக்கப்பட்டுவிடும் என்பதனால்,

முற்றுமுழுதாக நடுநிலையானவர்களைக் கொண்டவகையில் இவ் விசாரணைக் குழுவை அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தவறு செய்தவர்கள் தப்பிக் கொள்ளாமல் இருப்பதற்கும்,

அழிந்துபோன உயிர்கள், சொத்துக்களின் பூரண விபரங்களையும் அதற்குக் காரணமானவர்களையும் சரியான முறையில் வெளிப்படுத்துவதற்கும் ஏற்றவகையிலேயே இவ் விசாரணைக் குழுவுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- அரசபடைகளினால் வெளிப்படையாக நடத்தப்பட்ட கொலைகள், கொள்ளைகள், சேதங்கள்.
- அரசபடைகளினால் மேற்கொள்ளப்பட்ட கற்பழிப்புகள்.
- அரசபடைகளினால் கைது செய்யப்பட்டு காணாமற்போனோர்.
- இயக்கங்களினால் அந்தந்த இயக்கங்களுக்குள் நடத்தப்பட்ட கொலைகள், சித்திரவதைகள்.
- இயக்கங்களினால் மேற்கொள்ளப்பட்ட - மாற்று இயக்கத்தவர்களைக் கொலை செய்தமை, சித்திரவதை செய்தமை.
- இயக்கங்கள் தமது நிதித் திரட்டலுக்காக நடத்திய கொள்ளைகள்.
- இயக்கங்களின் பெயரில் தனிநபர்கள் நடத்திய கொள்ளைகள்.
- இயக்கங்களின் பொது நிதியைக் கையாடிக்கொண்டு தப்பியோடியோர்.
- சமூக விரோதிகள், காட்டிக்கொடுப்போர், 'ஜிஹாத்' மற்றும் பெயர்களில் இயக்கங்களினால் நடத்தப்பட்ட கொலைகள்.
- சிவில் நிர்வாகச் சீர்குலைப்பு என்பதன்பெயரில் படுகொலைகளுக்கு உள்ளானோர்.
- புனர்வாழ்வு, மனித உரிமை என்னும் பெயரில் வெளிநாட்டு நிதி நிறுவனங்களிடமிருந்து பணத்தைத் திரட்டி, தமது சொந்த தேவைகளுக்காக சுருட்டிக்கொண்டமை . . . . .

போன்ற அனைத்து விபரங்களையும் திரட்டி வெளிப்படையாக வெளியிடுவதும், நட்டஈட்டுச் சிபார்சை வெளியிடுவதும் இந்த விசாரணைக் குழுவின் நோக்கமாக உள்ளன.

இப்படியானதொரு விசாரணைக் குழுவை வெற்றிகரமாக நடத்தி முடிப்பதில் உள்ள சிரமங்களும், ஆபத்துக்களும் கணக்கில் எடுக்கப்பட்டுள்ளன.

ஈழவிடுதலைப் போராட்டத்தையும் தமிழ் மக்களையும் மிகவும் சில்லறைத்தனமாகக் கணக்கெடுத்துக் கொண்டு செயற்பட்ட கொலைஞர்களுக்கும், கொள்ளையர்களுக்கும், அராஜகவாதிகளுக்கும் இந்த முயற்சி பெரும் ஆபத்தாகவே தோன்றும்.

இதனால் அவர்கள் இந்த விசாரணைக் குழு வெற்றிகரமாக நடைபெறவிடாமல் தடுப்பதற்கு எல்லாவித முயற்சிகளையும் மேற்கொள்வார்கள் என்பதை இதற்கான முயற்சியில் ஈடுபடுவோர் முன் கூட்டியே உணர்ந்துள்ளனர்.

அதற்கேற்ற வகையிலேயே செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த விசாரணைக்குழு பூரண வெற்றியை அடைவதற்கான அனைத்து ஒத்துழைப்புக்களையும் மேற்கொள்ளும் முயற்சியில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது.

இதற்காக, அனைத்து ஜனநாயக சக்திகளினதும் பொதுமக்களினதும் ஒத்துழைப்பைத் திரட்டுவதற்கான வேலைத்திட்டத்தையும் EPRLF வகுத்துள்ளது.

அனைத்து ஜனநாயக சக்திகளினதும், தமிழ் மக்களினதும், ஒத்துழைப்பிலேயே இந்த விசாரணைக் குழுவின் வெற்றி தங்கியுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்●

### உள்ளே....


"....இருபகுதி உழைக்கும் மக்களுக்குமிடையில் ஒற்றுமை ஏற்படவேண்டுமானால், தமிழ்மக்களின் அடிப்படை உரிமைகளுக்காக - பாதுகாப்பிற்காக சிங்களமக்கள் சிறீலங்கா முதலாளித்துவ அரசுக்கெதிராகப் போராடவேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும்....."

சிங்கள மக்களுக்கு நாம் என்ன சொல்கிறோம்?
—2ம்,7ம்.8ம் பக்கங்களில்...

"....மக்களின் நலன்களுக்காகவோ, வரும் காலத்தில் ஈழ மக்களுக்கு ஏற்படக் கூடிய ஆபத்துக்கள் பற்றியோ, இவ்வொப்பந்தத்தில் உள்ள அடிப்படை குறைகளைக் காரணம் காட்டியோ இந்திய அரசுடன் பிரபாகரன் முரண்படவில்லை. மாறாக சொந்த நலன்களுக்காக; தங்களின் சொந்த பாதுகாப்புக்கு உரிய உத்திரவாதத்திற்காகவே அவர் முரண்பட்டார்......."

தோழர் பத்மநாபா பேட்டி.
—4ம் 5ம் பக்கங்களில்—

கடந்தகாலச் சம்பவங்களால் பாதிப்புகளுக்குள்ளான ஒவ்வொருவரும் செய்ய வேண்டியது என்ன?
— கடைசிப் பக்கத்தில்...


தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

# சிங்களமக்களுக்கு நாம் என்ன சொல்கிறோம்?

இந்த நாட்டு மக்களைக் கூறுபோட்டு, ஒருவரொடொருவர் மோதவிட்டு கடந்த நாற்பது ஆண்டுகளாக இந்த நாட்டின் அனைத்து உழைக்கும் மக்களின்மீதும் அதிகாரக் குதிரையைச் செலுத்தி வந்துள்ள முதலாளித்துவ ஆளும் சக்திகள், இன்று அவர்கள் தமக்குள்ளேயே ஒருவரோடொருவர் அதிகாரத்திற்காகவும், பதவிகளுக்காகவும், பணத்துக்காகவும் மோதிப் பிளவுபட்டுக் கொண்டிருக்கும் இந்த வேளையில், இந்த நாட்டிலுள்ள அனைத்து புரட்சிகர, இடதுசாரி, ஜனநாயக சக்திகளும் ஒற்றுமையாக, ஒரு முகமாக, ஓரணியாக நிற்கவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது

கடந்த இரு தசாப்தங்களாக இலங்கையின் அரசியல் ஒருமுறும் எரிமலையாக இருந்துவருகின்றது. இந்த நாட்டின் இளைஞர்களினதும் யுவதிகளினதும் இரத்தம் வெள்ளமென பெருக்கெடுத்துப் பாய்ந்துகொண்டிருக்கின்றது.

இந்த 1988ம் ஆண்டிலும் இரும்புக் கரங்கள்தான் எம்மைச் சூழ்ந்திருக்கின்றன.

இலங்கையில் வாழும் தமிழ் பேசும் மக்கள், சிங்கள மக்கள் ஆகிய இரு தேசிய இன மக்களிடையேயும் பகைமைகள் வளருவதற்கான வகைகளே செய்யப்பட்டன.

பிரித்தானிய காலனி ஆதிக்கக்காரர்களால் கையாளப்பட்ட பிரித்தாளும் தந்திரமானது, அவர்களின் அடிபொற்றி வந்த அதிகாரத்துக்கு வந்த முதலாளித்துவ ஆட்சியாளர்களினாலும் அவ்வாறே கடைப்பிடிக்கப்பட்டு வந்தது.

இந்த ஆட்சியாளர்களினால் சிங்கள பௌத்த பெருந்தேசிய இனவெறியும், குறுகிய தமிழின வெறியுமே தலைவிரித்து வளர்ந்து வந்துள்ளன.

இந்நிலையில், புரட்சிகர இடதுசாரி ஜனநாயக முற்போக்குச் சக்திகளான எம்முன்னுள்ள உடனடி கடமை என்ன?

சகலவிதமான இனவெறிக் கூச்சல்களுக்கு எதிராகவும், பயங்கரவாத ஆயுதக் கொடூரங்களுக்கு எதிராகவும் தயவு தாட்சண்யமின்றி நாம் அனைவரும் ஒருங்குதிரண்டு நின்று போராடுவதேயாகும்.

### ஒப்பந்தம் ஏன் வந்தது?

சிறிலங்கா அரசாங்கங்களினால் மேற்கொள்ளப்பட்டுவந்த இனவெறித்தனமான சட்டங்களினாலும், சிங்கள மொழித்திணிப்பு [illegible]களினாலும், பாரபட்சமான கல்வி வேலைவாய்ப்பு ஒதுக்கீடுகளினாலும் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றத் திட்டங்களினாலும், காட்டுமிராண்டித்தனமான இனப்படுகொலைகளாலும் ஒடுக்கப்பட்ட தேசிய இனம் என்ற வகையில், தமிழ்ப் பேசும் மக்களின் விடுதலைப் போராட்டம் கொழுந்துவிட்டு எரிமலையாக வெடித்து தெருப்பட்ட [illegible]யாக வெள்ளமாகப் பாய்ந்தது.

இப்போராட்டத்தின்போது 15000 தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்கள்.

50000க்கு மேற்பட்ட வீடுகள் அழிந்தன.

மூன்று இலட்சத்துக்கு மேற்பட்டோர் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அகதிகளானார்கள்.

பல்லாயிரம் கோடி ரூபா பெறுமதியான தமிழ் மக்களின் சொத்துக்கள் அழிந்தன, எரிந்தன, கொள்ளையடிக்கப்பட்டன.

இந்த நிலையிலேதான் இலங்கை. இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானது.

கடந்த 14. வருடங்களாக தனி ஈழக் கோரிக்கையை முன்வைத்துப் போராடிய தமிழ் பேசும் மக்கள் சிந்திய இரத்தத்திற்கும் செய்த தியாகத்திற்கும் இலங்கை-இந்திய ஒப்பந்தமே மாகாணசபையேலோ பெறுபேறுகாது என்பதை நேர்மையுள்ளம் கொண்ட அனைவரும் ஒத்துக்கொள்வர் என்று எதிர்பார்க்கிறோம்.

இலங்கை- இந்திய ஒப்பந்தத்தை ஒரு நியாயபூர்வமான தீர்வு என்ற அடிப்படையில் நாம் ஒத்துக்கொள்ளவில்லை. மாறாக, அரசபயங்கரவாதத்தில் மக்கள் இரத்தம் சிந்துவதை, முடிவுக்குக் கொண்டுவருவதற்காகவே நாம் அதனை ஏற்றுக்கொண்டோம்.

இலங்கை-இந்திய ஒப்பந்தம் வெறுமனே தமிழ் பேசும் மக்களுக்கு மட்டும் அல்ல, சிங்கள மக்களின் எதிர்கால நலன்களுக்கும் அது அவசியமானது என்றே நாம் கருதுகிறோம்.

ஆனால், இந்த ஒப்பந்தங்களின் மூலம் தமிழ்ப் பேசும் மக்களின் அடிப்படைக் கோரிக்கைகள் திருப்தி செய்யப்பட்டுவிட்டதாக யாரும் கருதிவிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

### கூறுபோட்டுக் கொள்ளையடிக்கும் சர்வதேசக் கூட்டாளிகள்

கடந்த நான்கு வருட யுத்தத்தை நடத்துவதற்காக ஐ.தே. கட்சி அரசு இலங்கை மக்கள் அனைவரின் மீதும் பொருளாதார சுமைகளை ஏற்றியிருக்கின்றது.

இலட்சக்கணக்கான மக்களை வறுமைப் படுகுழியில் தள்ளியிருக்கின்றது.

இந்த அரசாங்கத்தின் முன்னாள் நிதியமைச்சர் ரொனி டி மெல் பல தடவைகள் இதனை விரக்தியுடன் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

இலங்கையின் பொருளாதாரம் யுத்தப் பொருளாதாரமாக்கப்பட்டது.

உலகம் முழுவதும் பிச்சைப்பாத்திரம் ஏந்தப்பட்டது.

சிறிலங்காவானது, ஏகாதிபத்திய சக்திகளின் ஆயுதவியாபாரத்திற்கு தென்னாசியாவில் ஒரு முக்கிய சந்தையாக மாற்றப்பட்டது.

அமெரிக்க சி.ஐ.ஏ., இஸ்ரேலிய மொஸாட், தென்னாபிரிக்க, பாகிஸ்தானிய உளவுப்படைகள் ஆகியவற்றின் கூடாரமாக இலங்கை ஆகியது.

### இதெல்லாம் ஏன் ஏற்பட்டது?

தமிழ் பேசும் மக்களும் தனது ஆட்சிக்கு உட்பட்ட மக்களே என்று கூறும் சிறிலங்கா அரசானது, தமிழ் பேசும் மக்கள் மீது ஒரு பெரும் யுத்தத்தை அந்நிய சக்திகளின் ஆதரவுடன் நடத்தியது.

தமிழ் பேசும் மக்களும் இந்த நாட்டு மக்களே என்ற கௌரவத்தையும், பாரபட்சமற்ற தீர்வுகளையும், அடக்குமுறையற்ற ஆட்சியையும் வழங்கியிருந்தால், இவை ஏற்பட்டிருக்கவேண்டியிருந்திருக்காது.

இப்போதாயினும் சிறிலங்கா அரசாங்கத்துக்கு அந்த நோக்கம் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி மட்டுமல்ல சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் தமிழ்ப் பேசும் மக்களை அந்நிய மக்களாகவே கருதி நடத்திவந்தது.

இன்றைக்கு அந்தப்போக்கு இன்னும் அதிதீவிரமடைந்த [illegible] குறைந்ததாக இல்லை.

யாராக இருந்தாலும் சரி இனவெறி அரசியலானது இந்த நாட்டையும் மக்களையும் பிளவுபடுத்துமே தவிர ஒற்றுமைப்படுத்தாது என்பதைக் கூறிவைக்க விரும்புகிறோம்.

### இது எங்கள் பூமி

முதலாளித்துவ அரசாங்கங்கள் அனைத்தும் தம்மை சிங்கள பௌத்த விசுவாசிகள் போலக் காட்டிக் கொண்டாலும், சிங்கள மக்களையும் அடக்கி ஒடுக்கியே ஆட்சிசெய்து வந்திருக்கின்றன.

தென்னிலங்கையில் எழுந்த தொழிலாளர்களின் வேலைநிறுத்தங்கள், விவசாயிகள்—மாணவர்களின் போராட்டங்கள் துப்பாக்கிமுனையில் நசுக்கப்பட்ட வரலாற்றைக் கணக்கிட்டுப் பார்க்கும் எவருக்கும், சிங்கள மக்கள் தமது உரிமைகளுக்காகப் போராடுகின்றபோது இந்த முதலாளித்துவ அரசாங்கங்கள் பூப்போட்டு வரவேற்கும் என்று எதிர்பார்க்கத் தோன்றுமா.

சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களிடையே ஒற்றுமையேற்படாவிட்டால் ஒருபகுதி மக்களின் உரிமைகளுக்கான போராட்டத்தை ஆதரித்து மறுபகுதி மக்கள் கிளர்ந்தெழுந்து அடக்குமுறை அரசுக்கெதிராகப் போராடத் தவறினால்—போராட்டங்களை அடக்குவது அரசாங்கங்களுக்குச் சுலபமானதாகவே அமையும்.

( - தொடர்ச்சி 7ம் பக்கம்......)



## ஈசாப் குட்டிக் கதைகள் —3

### ஓநாயும் ஆட்டுக்குட்டியும்

ஓர் ஆட்டுக்குட்டி ஒரு கால்வாயில் தண்ணீர் குடித்துக் கொண்டிருந்தது. அதை ஒரு பசியுள்ள ஓநாய் பார்த்தது; ஏதாவது ஒரு காரணம் காட்டி அதைத் தின்றுவிட விரும்பியது.

''நான் தண்ணீர் குடிக்கப் போகும்போது நீ தண்ணீரைக் கலக்கும்படி ஆயிற்று?'' என்று கோபத்தோடு ஓநாய் கேட்டது.

''மன்னிக்க வேண்டும். தண்ணீர் நீங்கள் இருக்கிற இடத்திலிருந்துதானே இங்கே ஓடி வருகிறது. நான் எப்படிக் கலக்க முடியும்?'' என்று பவ்வியமாய் ஆட்டுக்குட்டி கேட்டது.

''அது சரி, ஆனால் ஒரு வருஷத்திற்கு முன்பு என்னை நீ திட்டினாயாமே?'' என்றது ஓநாய்.

''என்னை நம்புங்கள், நான் பிறந்தே ஆறு மாதங்கள் தான் ஆயிற்று'' என்று சொல்லிற்று ஆட்டுக்குட்டி.

''அப்படியானால் உன் சகோதரன் என்னைத் திட்டியிருக்க வேண்டும்.''

''எனக்குச் சகோதரர் யாரும் இல்லையே!''

''உங்கள் கும்பலில் யாராவதுதான் சொல்லியிருக்க வேண்டும். வெறும் நொண்டிக் காரணங்கள் சொல்லி மழுப்பவா பார்க்கிறாய்?'' என்று கூறிக் கொண்டே ஓநாய், ஆட்டுக் குட்டியின்மீது பாய்ந்து அதைக் கொன்று தின்றது.

குறிப்பு :— இது ஈஸாப் குட்டிக்கதை. கொலைவெறி பிடித்த இயக்கங்களின் பசிக்கும் இந்த ஓநாயின் பசிக்கும் இடையில் ஏதோ ஒற்றுமையிருப்பதாக நீங்கள் சிந்தித்தால்.... அதாவது, நீங்கள் சுதந்திரமாகச் சிந்திக்க முற்படுகிறீர்கள் என்றால...... இடையில் நாம் சொல்வதற்கு என்ன இருக்கிறது?

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இனியும் தமிழ் மக்களே!....

இப்போது புரிகின்றதா இந்தப் புலிகள் எதற்காக இந்தியப்படைகளோடு சண்டையைத் தொடங்கினார்கள் என்பது?

மக்களின் உயிர்ப்பலிகளையும் உடைமை இழப்புக்களையும் பகடைக் காய்களாக்கி,

இந்திய அரசிடம் கோடிக்கணக்கான பணத்தையும்,

கொலைவெறியாட்டத்தைத் தங்கு தடையின்றி நடத்துவதற்கான அனுமதியினையும் பெறுவதற்காகவே இவர்கள் சண்டை பிடித்தார்கள் என்பது இப்போது அம்பலமாகிவிட்டது.

இந்தப் புலிகள் கூட்டம் தமிழ் மக்களுக்குச் செய்துள்ள இனத்துரோகம் இன்று நேற்று ஆரம்பித்த ஒன்றல்ல.

இவர்களின் துரோகத்திற்கு ஒரு தொடர்ச்சியான வரலாறே உண்டு.

இவர்களின் துரோகத்தனங்களை முகத்திரை கிழித்து முழுமையாகக் காட்டுவதாயின் ஒரு நீண்ட பட்டியல் தேவைப்படும்.

புலிகளின் துரோகம் தமிழ் மக்களிற்குத் தெரியாததுமல்ல-

புரியாததுமல்ல.

கெட்டிக்காரனின் புளுகு கூட எட்டு நாளைக்குத்தான்.

இவர்களின் புளிதப் புளுகுகள் எத்தனை நாளைக்குத் தாக்குப் பிடிக்கும்?

இந்த அயோக்கியர்கள் தமது பணவெறியையும் பதவிவெறியையும் தீர்த்துக்கொள்வதற்காக -

நண்பர்களாக வந்த இந்தியப் படையினரை எதிரிகளாக மாற்றிப் பல நூற்றுக்கணக்கான மக்களைப் பலிக்கடாவாக்கினார்கள்;

மீளமைக்க முடியாத அளவுக்கு எமது மக்களின் உடைமைகளைச் சீரழிவுக்கு உள்ளாக்கினார்கள்.

இந்தியப் படையினரோடு தாங்கள் தொடங்கிய யுத்தத்துக்கு இந்தப் புலிகள் கொடுத்த பெயர்கள் -

'தேசபக்த யுத்தம்',

'தமிழீழ விடுதலைக்கான யுத்தம்',

'தமிழினத்தின் சுதந்திரத்திற்கான யுத்தம்'

என்பனவாகும்.

இதை உண்மையிலேயே நம்பி மாண்ட புலிகளின் சிற்றினம் உறுப்பினர்களுக்காக மனப்பூர்வமாக நாம் கவலைப்படுகிறோம்.

ஆனால், பிரபாகரன் - மாத்தயா கும்பல் தமது துரோகத்தனத்தைப் பற்றி மிகத் தெளிவாகவே இருந்திருக்கிறார்கள் என்பதை இப்போது அனைவராலும் கண்டுகொள்ள முடிகின்றது.

பிரபாகரன் - பாலசிங்கம் கும்பலுக்கு தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் ஒரு சூதாட்டம்.

இந்திய முதலாளித்துவ அரசிடம் எத்தனை தடவைகள் எமது விடுதலைப் போராட்டத்தைச் சந்தைப் பொருளாக்கி - பேரம்பேசி கோடிக்கணக்கான பணத்தைக் குவித்துக் கொண்டார்கள் என்பது இன்று உலகறிந்த உண்மை.

கடந்த காலத்தில் பாராளுமன்ற அரசியல்வாதிகள் தமிழ் மக்களை மேடைப்பேச்சால் மட்டும் தான் ஏமாற்றினார்கள்.

அவர்கள் வெறுமனே பாராளுமன்றப் பதவிகளை மட்டும்தான் பெற்றுக் கொண்டார்கள்.

ஆனால் -

இந்தப் புலிகள் கும்பலோ கொலை செய்வதை வியாபாரமாக்கிக் கொண்டார்கள்.

இவர்களால் கொல்லப்பட்ட ஆசிரியர்கள், அரசாங்க அதிபர்கள், கல்விமான்கள், அப்பாவிகள் எத்தனை பேர் .....

எமது சமுதாயத்தின் ஆணிவேர்களான இளைஞர்கள் எத்தனைபேரை இவர்கள் கொன்றுகுவித்தார்கள்.

தமது பாசிச தலைமையை நிலைநிறுத்திக்கொள்வதற்காக இவர்கள் பலநூற்றுக்கணக்கான தமது உறுப்பினர்களையே முகவரி தெரியாமல் மண்ணோடு மண்ணாக்கி விட்டிருக்கிறார்கள் .....

தாம் மட்டுமே தனிக்காட்டு ராஜாக்களாக ஊர்வலம் வரவேண்டும் என்ற வெறியால் -

தமிழ் மக்களின் விடுதலைக்கான போராட்டத்தில் கவனம் செலுத்தி வந்த இயக்கங்களை, இவர்கள் தமது ஆயுத பலத்தினால் சீரழித்து சிறீலங்கா அரசுக்கு உதவி புரிந்தது எத்தனை தடவைகள் .....

ஜே. ஆர் அரசாங்கம், தமிழ் மக்களுக்குத் திருப்தி தராத மாகாண சபைச் சட்டமூலத்தை எந்தவித எதிர்ப்புமின்றிப் பாராளுமன்றத்தில் சட்டமாக்கிக் கொள்வதற்கான வசதிகளையும் வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுத்தவர்கள் இந்தப் புலிகள் அல்லவா .....

இன்றைக்கும் சிறீலங்காவின் சிறைகளில் இருக்கும் எமது இளைஞர்களை, சிறீலங்கா அரசாங்கம் விடுதலை செய்யாமல் சாக்குப்போக்குகளைச் சொல்வதற்கு வசதியை ஏற்படுத்திக் கொடுத்திருப்பவர்கள் புலிகள் அல்லவா....

தமிழ் மக்களைக் கொலை செய்கின்றபோது புலிகள் வழங்கும் பட்டம் -

'சமூக விரோதிகள்',

அல்லது 'காட்டிக்கொடுப்பவர்கள்'!

முஸ்லிம் மக்களைக் கொலை செய்கின்றபோது அவர்களுக்கு இந்தப் புலிகளால் வழங்கப்படும் பட்டம் - 'ஜிஹாத்';

சிங்கள மக்களைக் கொலை செய்கின்றபோது அதற்குச் சொல்லப்படும் காரணம் -

சிங்களவர் தமிழ்ப் பகுதிகளில் குடியேற முற்பட்டார்கள் என்பதே.

ஆனால், உண்மை தெரியுமா?

புலிகள், தங்களுடன் பேச்சுவார்த்தை நடத்த இந்திய - இலங்கை அரசுகள் முன்வரவில்லையென்றால் -

தங்களால் அப்பாவி மக்களைக் கொலை செய்து குவிக்க முடியும் என்பதையே புலிகள் நிரூபிக்க முற்படுகின்றார்கள்.

நிராயுதபாணியான மக்களை, இளைஞர்களைக் கொலை செய்து தமது பதவி - பணப்பேர வியாபாரத்தை நடத்திக்கொள்ளவே முற்படுகின்றார்கள்.

எது தேசபக்தி?

எது தேசத் துரோகம்?

கொஞ்சம் சிந்தித்துப் பார்த்துச் சொல்லுங்கள்.

களவெடுத்தவனே எல்லோரையும்விட முன்னதாகக் "கள்ளன் கள்ளன்" என்று கத்திக்கொண்டு தப்பி ஓடுவதைப்போல -

இன்று துரோகிகளே தியாகிகள் போல் வேசம் போடுகிறார்கள்.

உணர்ச்சி மிக்க அப்பாவி இளைஞர்களுக்கு கட்டுப்பாடு என்ற பெயரில் நஞ்சு கொடுத்துக் கொலை செய்தவர்கள்-

பல நூற்றுக்கணக்கான இளைஞர்களைத் தேவையற்ற யுத்தக்களங்களில் பலிக்கடாக்களாக்கியவர்கள் -

இந்தியப் படைகளுடனான தங்களின் சண்டையின்போது,

மக்கள் சொல்லொணாத் துன்பங்களையும் இழப்புக்களையும் அனுபவித்தபோது-

போராட்டம் என்றால் மக்கள் இறப்பதும் துன்பப்படுவதும் இயற்கைதானே என்று வக்கிரமான போராட்டத் தத்துவம் பேசியவர்கள்....

இன்று-

எதற்காக இதுநாள்வரை சண்டை பிடித்தார்கள் என்பது இப்போது மெல்ல மெல்ல அம்பலத்துக்கு வந்துவிட்டது.

தேசபக்தி வேஷம் கலைக்கப்பட்டிருக்கிறது.

துரோகத்தின் முகத்திரை கிழிக்கப்பட்டிருக்கிறது.

புலிகளின் வியாபாரம் நல்ல விலை போகின்றது என்று சொல்லப்படுகின்றது.

ஆனால், மாண்டுபோன மக்களுக்கு கணக்கு என்ன?

அழிக்கப்பட்டுப்போன சொத்துக்களுக்கு மீட்சி என்ன?

அங்கவீனர்களாகிப் போனவர்களுக்கு வாழ்வு என்ன?

புலிகளை நோக்கி இந்தக் கேள்விகளை எழுப்புங்கள்.

தடியெடுத்தவன் தண்டக்காரன் என்பதுபோல இன்று துப்பாக்கி பிடித்தவனெல்லாம் நீதிபதியாகி விட்டான்.

தட்டிக்கேட்க ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டன்தான்.

மக்கள் கணநேரம்கூட விழிப்பாயிருக்காவிட்டால் -

அவர்களின் கடைசித்துண்டு ஜனநாயகத்தையும் களவாடிக் கொண்டு போக ஆயிரம் கழுகுகள் காத்து நிற்கின்றன.

மக்கள் தங்கள் உரிமைகளையும், எதிர்காலத்தையும் பற்றித் தெளிவாக இல்லாவிட்டால் -

மக்களின் பேரில் எந்த அயோக்கியனும் வியாபாரம் நடத்துவான்.

எனவேதான், நாங்கள் மீண்டும் மீண்டும் கூறுகின்றோம்.

மக்களே! நீங்கள் விழிப்பாயிருங்கள்!

உங்கள் பேரால் உங்களைச் சுற்றி நடைபெற்றுக் கொண்டிருக்கும் விடயங்களில் தெளிவாயிருங்கள்!

ஆக்கிரமும் அவசரமும் வாழ்வைத் தராது.

- அலட்சியமும் அஜாக்கிரதையும் உன்னதையும் மற்றவர்கள் கொள்ளை கொண்டுபோக வழிவகுக்கும்.

எனவேதான் -

● தமிழ் மக்களினதும் இயக்கங்களினதும் ஒற்றுமையைச் சீர்குலைத்து,

தமிழ் இயக்கங்களுக்கிடையில் இரத்த ஆறை ஓடவைத்த துரோகிகளை,

● இந்தியா தங்களை மட்டும் ஆசீர்வதிக்க வேண்டும், தனி விமானத்தில் பெங்களூர் செல்லவேண்டும் என்று,

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தைப் பேரம்பேசி விற்ற அயோக்கியர்களை,

● தாங்கள் மட்டும் தப்பிக்கொள்ள வேண்டும் என்பதற்காக புலிகளின் பேர வியாபாரத்திற்கு 'ஆமா' போட்டு வாலாட்டிய சந்தர்ப்பவாதிகளை,

● போராட்டம்தான் தொலைந்து போயிற்று. அமைதியாவது கிடைக்கட்டும்,

குறைந்தபட்ச ஜனநாயகமாவது மிஞ்சட்டும்

என்றிருந்த வேளையில் அதற்கும் உலைவைத்து,

தமிழ் மக்களின் வாழ்வை தமது சுயநலத்துக்காகச் சீரழித்த துன்மார்க்கர்களை,

● சிறீலங்கா அரசுக்கெதிரான போராட்ட காலகட்டத்தில் ஏற்பட்ட அழிவுகளுக்குப் -

புனர் வாழ்வளிப்பதற்கும்,

புனரமைப்புகளை மேற்கொள்வதற்குமென உலகம் முழுவதும் இருந்து முன்வந்த பெருந்தொகை உதவிகள் எதுவும் தமிழ் மக்களுக்குக் கிடைக்க முடியாமற் செய்த இனவிரோதிகளை,

● வரிகளாலும், கொள்ளைகளாலும் மக்களைத் தொடர்ந்து துன்பத்திற்கு ஆளாக்கிய சமூக விரோதிகளை,

● தங்களது சொந்த நோக்கங்களை அடைவதற்காக -

சிவில் நிர்வாகங்களை சீர்குலைத்து,

இளைய தலைமுறையின் கல்வியைச் சீரழித்து,

மக்களில் பல்வேறு மட்டத்தவர்களையும் கண்மூடித்தனமாகக் கொலை செய்து திரிந்த மக்கள் விரோதிகளை -

தமிழ் மக்கள் சரியாகவும், தெளிவாகவும் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும்.

கொலைவெறி,

கொள்ளை வெறி,

அதிகார வெறி பிடித்து காட்டுமிராண்டித்தனமாகத் திரிந்தவர்களின் முகத்திரையைக் கிழித்து -

உண்மைகளை அம்பலத்துக்குக் கொண்டுவருவதற்கான நாள் நிச்சயம் வரும் என்ற உறுதியோடும்,

நம்பிக்கையோடும்

நாம் அனைவரும் முன்னோக்கிய பாதையில் நடைபோடுவோம். ●

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# எமது மக்களுக்கு

# எமக்குரிய அதி

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (EPRLF) தலைவரான திரு.க. பத்மநாபா ஆயுத ஒப்படைப்பு நிகழ்ச்சிக்காக' இலங்கைக்குச் செல்ல விருந்த நேரத்தில் அவரை சந்தித்தோம். இலங்கைத் தமிழர் ஒப்பந்தத்தைப் பற்றியும், போராளிகளின் இன்றைய் நிலைமைகளைப் பற்றியும் இலங்கையின் தற்போதய சூழலைப் பற்றியும் விரிவாக பேசினார். அவற்றின் சாராம்சம்:

***இலங்கைத்தமிழர் ஒப்பந்தம் போராளிகள் மீது வலுக் கட்டாயமாக திணிக்கப்பட்டதா.***

அப்படி கூறுவதற்கு இல்லை. இன்றைய இலங்கையின் அரசியல் சூழலையும், தமிழ் மக்களின் நிலையையும் எண்ணிப் பார்த்து, சாதக பாதக நிலைமைகளையும் கருத்தில் கொண்டு, எங்கள் இயக்கம் இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டது. எங்கள் போராளிகளின் கூட்டமைப்பில் உள்ள பிற போராளிகளும் (TELO, PLOT ENDLF) இதுபோன்றே செயல்பட்டு இவ்வொப்பந்தத்தை ஏற்றுக்கொண்டுள்ளனர் என்றே கருதுகிறேன்.

***ஜெயவர்த்தனா - ராஜீவ் ஒப்பந்தம் அவசர கோலத்தில் செய்யப்பட்டதா?***

கடந்த மூன்றாண்டு காலமாக நடந்த பேச்சு வார்த்தைகளின் விளைவுதான் இது. இதற்கான அரசியல் முடிவுகள் ஒரு வேளை விரைவாக எடுக்கப்பட்டது என்று கூறலாம்.

***இவ்வொப்பந்தத்தை நிறைவேற்றுவதன் மூலம், உண்மையான சமாதானமும் முழுமையான அமைதியும் இப்போது இலங்கைத் தமிழர்களுக்குக் கிடைக்குமா?***

உண்மையான சமாதானமா?......(சிரித்துவிட்டு) முழுமையான அமைதி எப்படி நிலவும்? சமாதானம் எப்படி தழைக்கும்?

தற்காலிகமான ஒரு அமைதியை, சமாதானத்தைத் தான் அளிக்கும் என்றே நான் கருதுகிறேன்.

ஒரு பக்கம் சிங்கள இன வெறியைக் கூறலாம் அதை இந்த அமைப்பில் உள்ள சட்டங்களாலும் கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு உள்ளது. இலங்கையின் அரசியல் கட்சிகள் - இன்றைய (U.N.P) ஆளும் கட்சி உட்பட - இதைத் தூண்டி வளர்த்து தங்களுக்காக பயன்படுத்தி உள்ளன. அது அம்மக்களிடையே ஆழப்பதிந்துள்ளது. ஒரு சமூகப் புரட்சி ஒன்றினால் தான் மக்களின் இத்தகைய உணர்வுகளை மாற்றமுடியும். அப்போதுதான் முழுமையான சமாதானத்தையும் அமைதியையும் அடைய முடியும்.

மறுபக்கம் ஆயுதங்களின் மூலம் தங்கள் அதிகாரத்தை நிலை நிறுத்திக் கொள்ளும் விடுதலைப் புலிகள் உள்ளனர். அதிகாரத்திலும் பதவி வெறியிலும் சுவை கண்டுள்ளனர். அதை இந்த சூழல் நிலையிலும் கூட விட்டுக் கொடுக்க மாட்டார்கள். சகபோராளிகளின் தியாகத்தையும் மதித்து நெகிழ்வாக பங்களிக்கும் படியான ஒரு சூழலை உருவாக்க அவர்கள் விரும்ப மாட்டார்கள். அப்படி இருக்கை யில் நிரந்தரமான அமைதி எப்படி ஏற்படும்?

***ஒப்பந்தத்தைப் பற்றி தங்களின் கருத்து என்ன?***

இன்றைய நிலையில் இந்த ஒப்பந்தம் உடனடித் தேவையான ஒன்றாகும். இலங்கைத் தமிழர்களுக்கு இப்போது ஒரு ஒய்வு வேண்டும். அமைதி வேண்டும். இது ஒரு வேளை இடைக்கால அமைதியாகக் கூட இருக்கலாம். ஆனால் அதை அளிக்க வேண்டிய பொறுப்பு போராளிகளுடையது.

ஒரு இடைக்கால அமைதியை ஏற்படுத்துவதற்கும்; தவறான அராஜக வழியில் சென்று கொண்டு இருக்கும் தமிழர் போராட்டத்தை உடனடியாக நிறுத்துவதற்கும் இது பயன்படும் என்றே நாங்கள் கருதுகிறோம். இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, நின்று நிதானமாக ஒரு சரியான சமூகப் புரட்சியை உருவாக்குவதற்கு, எதிர்காலப் போராட்டத்தை முன்னெடுப்பதற்காகவே இவ்வொப்பந்தத்தை நாங்கள் ஏற்று கொண்டோம்.

இந்த ஒப்பந்தத்தை நிராகரித்தால் நியாயமற்ற சமாதானத்தை விரும்பாத, முரட்டு வெறிபிடித்த ஆயுத வெறியர்களாகவே அனைவர் முன்பும் நாம் காட்சியளிப்போம்.

***ஒப்பந்த அமுலுக்கு போராளிகள் தடையாக இருப் பார்களா?***

தமிழ் மக்களின் நலன்களை விரும்பும் யாரும் இப்போது இதற்குத் தடையாக இருக்க மாட்டார்கள். அதிகார நோக்கமும் பதவி வெறியும் கொண்ட ஒரு சில போராளி தலைவர்களே - அவர்களின் தொண்டர்கள் அல்ல - வீண் பிடிவாதம் பிடித்து ஏதாவது ஒரு காரணத்தை அப்போதைக்கப்போது காட்டி இதற்கு தடையாக இருப்பார்கள்.

ஒரு சில மோசடி சக்திகள் யுத்த சூழலை பயன்படுத்தி கொள்ள லாபம் அடிப்போர், கொலை, கொள்ளை நடத்தும் சக்திகள், ஆயுதத்தை ஏந்துவதில் மோகம் கொள்பவர்கள், புரட்சியின் பேரால் சுயலாபம் பெறுவோர் ஆகிய இவர்களே இன்று இதற்குத் தடையாக இருப்பர்.

***"போராளிகளை சமூக விரோத சக்திகள்" என்று பிரபாகரன் கூறியுள்ளாரே!...***

உண்மையில் யார் சமூக விரோதிகள் என்று மக்கள் அறிவர். போராட்டம் பலவீனமடைந்ததற்கு அவர்களே காரணம். ஈழப்போராட்டத்தில் இறந்த 3000 பேரில் பாதிபேர் சகோதர படுகொலைகளாலும் தற்கொலைகளாலுமே கொல்லப்பட்டுள்ளனர். சுமார் 1000 பேர் வரை தமிழ் ஈழ விடுதலைப் புலிகளால் (LTTE) கொல்லப் பட்டுள்ளனர்.

சகோதர இயக்கங்களின் மீது அவர்கள் கொடுத்த தாக்குதல் காரணமாக போராட்டம் பலவீனமடைந்தது

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ...தேவை அமைதி!

# ...காரம் அல்ல!!

அதனால் யாழ்பாணம் தவிர பிற மாவட்டங்கள் இலங்கை இராணுவத்தின் கட்டுப்பாட்டில் வந்தது. யாழ்ப்பாணப் பகுதியிலேயே இருக்கும் வட மராட்ச்சியையும் இழக்க நேர்ந்தது. எதிரியால் இறந்த தியாகத்தை விட நட்புசக்தியால்இறந்த இழப்புகள் தான் பெரிது. அது தேசபக்தியல்ல. தேசத்துரோகம், அதி தீவிரவாதிகளின் வேடமிட்டு; சுயநல நோக்கத்திலும் அதிகார வெறியிலும் மக்கள் நலன்களை யாருக்கு அடகு வைத்துள்ளார்கள் என்பதை அடையாளம் காட்ட வேண்டி உள்ளது.

***ஒப்பந்தத்தில் உங்கள் நான்கு அமைப்புகளுக்கும் அவர்களுக்கும் உள்ள (LTTE) வேறுபாடு என்ன?***

1988 நவம்பர் மாதமே அவர்கள் போராட்டத்தைக் கைவிட முடிவு செய்து விட்டார்கள். ஒரு ஒப்பந்தத்திற்கு தாங்கள் தயார் என்ற எழுத்து பூர்வமான ஒப்புதலின் பேரில்தான் 'சார்க்' மாநாட்டின் போது பிரபாகரன் பெங்களுருக்கு அழைத்துச் செல்லப்பட்டார். ஆனால் அனைத்து இயக்கங்களும் கொண்ட ஒரு ஒப்பந்தம் வேண்டும் என்ற மத்திய அரசின் முடிவின்படி இவ்வொப்பந்தம் ஏற்பட்டது.

> பத்து மாதங்களுக்கு முன் .... ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் தோழர் க. பத்மநாபா அவர்களை தமிழகத்திலிருந்து வெளியாகும் அரசியல் சமூக வாரப் பத்திரிகையான 'விசிட்டர் லென்ஸ்' பேட்டிகண்டது

மக்களின் நலன்களுக்காகவோ, வரும் காலத்தில் ஈழ மக்களுக்கு ஏற்படக் கூடிய ஆபத்துக்கள் பற்றியோ, இவ்வொப்பந்தத்தில் உள்ள அடிப்படை குறைகளைக் காரணம் காட்டியோ இந்திய அரசுடன் பிரபாகரன் முரண்படவில்லை. மாறாக சொந்த நலன்களுக்காக; தங்களின் சொந்த பாதுகாப்புக்கு உரிய உத்திரவாதத்திற்காகவே அவர் முரண்பட்டார். இடைக்கால நிர்வாக அதிகாரமும், முதலமைச்சர் பதவியைப் பெறுவதற்கே அவர் முயன்றார்.

ஆனால் நாங்கள் எதையும் பிறருக்காக விட்டுக் கொடுக்கும் நோக்கில், பிற அமைப்போடும் பங்களிக்கும் விதத்தில் நடந்து கொண்டு வருகிறோம். இப்போது மக்களுக்குத் தேவை அமைதி. அதை அளிக்க வேண்டும். எங்களுக்குரிய அதிகாரம் என்பதல்ல.

***தமிழகத்தில் உள்ள ஒரு சில கட்சிகள் இதை எதிர்க்கின்றனவே?***

இலங்கைத் தமிழர்களின் பிரச்னை இவ்வளவு சிக்கலானதற்கும் குழப்பமடைவதற்கும் காரணமே இங்குள்ள கட்சிகள் தான். தங்கள் தங்கள் நோக்கங்களுக்காக எங்களைப் பகடைக் காய்களாக பயன்படுத்திக் கொண்டனர். இங்குள்ள அரசியல் நிலையை ஒட்டி தான் அவர்கள் எதிர்க்கின்றனர்.

***இடைகால நிர்வாக சபையைப் பற்றி உங்களின் கருத்து என்ன?***

நாங்களும் சரி, எங்களின் ஐக்கிய அமைப்பில் உள்ள நான்கு அமைப்புகளும் சரி; அனைத்து அமைப்புகளுக்கும் உரிய பிரதிநிதித்துவம் வேண்டும் என்று தான் கோருகிறோம்.

***மிதவாதிகளுடன் இணைந்து நீங்கள் வருங்காலத்தில் பணியாற்ற முடியுமா?***

பலதரப்பட்ட எண்ணங்கள் உள்ள மக்களையே போராட்டத்திற்காக நாங்கள் ஒன்றிணைத்துள்ளோம். கடந்த காலத்தில் கூட ஜனநாயக அமைப்புகளில் பணியாற்றி செயல்பட்டுள்ளோம். ஆயுதம் ஏந்துவதற்கு மட்டுமல்ல, மக்களின் நலன்களுக்காக விட்டு கொடுப்பதிலும் தணிந்து போவதிலும் கூட நாங்கள் சளைத்தவர்கள் அல்ல.

***தேர்தல் சுமுகமான முறையில் அமையுமா?***

அமைய வேண்டும். இந்திய அரசு அதற்கு பொறுப்பு ஏற்றுள்ளது. சிங்கள வெறிகொண்ட குண்டர்கள் போலவே அதிகார மோகம் கொண்ட மறைமுகமாக ஆயுதபாணியான தமிழர் குண்டர் படைகளையும் கூட சமாளிக்க வேண்டியுள்ளது.

***இப்போது உங்கள் லட்சியத்தைக் கைவிட்டுவிட்டீர்களா?***

இல்லை. இன ஒடுக்க முறைக்கு எதிரான தமிழ் மக்களின் பிரிவினைப் போராட்டம் மட்டுமே தற்போது நின்று உள்ளது. தற்காலிகமான ஒரு ஓய்வு வேண்டி இது நின்றுள்ளது. ஆனால் 'சமூக புரட்சிக்கான விடுதலைப் போராட்டம்' என்ற எங்களின் நீண்டகாலப் போராட்டம் தொடர்ந்து நடக்கும். தென்னிலங்கையில் உள்ள சிங்களவர்களையும் இணைத்த சமூக புரட்சியாகும் அது.

போராட்ட வடிவங்கள் வேறுபட்டது. நேற்று ஆயுத போராட்டம் நடத்தினோம். இனி ஜனநாயக ரீதியான வெகுஜன போராட்ட வடிவமாக அது அமையும். நாளை திரும்ப மாறலாம். அது சிறீலங்கா அரசின் நடைமுறைகளைப் பொறுத்தது.

***உளவு சக்திகளின் வெளியேற்றம், இந்தியாவிற்குரிய பாதுகாப்புக்குரிய விஷயம் பற்றிய தங்களின் கருத்து என்ன?***

இந்த ஒப்பந்தத்தின் மூலம் இந்திய பாதுகாப்பு உத்திரவாதம் பெற்றுள்ளது. இஸ்ரேலின் மொசாட், பிரிட்டனின் கூலிப் படை (SOS) போன்றவை உடனடியாக வெளியேறும். அதே போல வல்லரசுகளின் பிடியில் குறிப்பாக அமெரிக்காவின் பிடியிலிருந்து வெளியேறி அணி சேரா நாடுகளின் பக்கம், இந்தியாவின் பக்கம் இலங்கை நிற்க வேண்டிய நிலைக்கு இது வழி வகுக்கிறது.

மேலும் போராளிக் குழுக்களிடையே. இருந்த உளவுக் குழுக்களும் கூட வெளியில் வர வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

***அதை எப்படி கூற முடியும்?***

உதாரணமாக சிறீலங்கா அரசிற்கு சார்பாக செயல்பட்டு வந்த தமிழக உயர் போலீஸ் அதிகாரியின் (இவர் ஒரு சி.ஐ.ஏ. என்று கூறுகிறார்கள்) கைப்பொம்மையாகவே பிரபாகரனின் இயக்கம் செயல்பட்டது. அது போன்ற நடவடிக்கை இனி ஏற்பட முடியாதல்லவா?

***தற்போது ராணுவ அரசியலைவிட்டு, ஜனநாயக ரீதியான தேர்தல் அரசியலுக்கு வந்துள்ளீர்கள். இது உங்களுக்கு பாதிப்பை உருவாக்குமா?***

நிச்சயமாக இருக்காது. இன்னும் அதிக அளவில் மக்களை சார்ந்து நிற்க முடியும். ஆயுதத்தில் எதிரிகளை நேருக்கு நேர் சந்தித்தோம். இப்போது வார்த்தைகளில் சண்டையிட வேண்டும். இப்போது சந்தர்ப்பவாத அரசியலை சந்திக்க வேண்டும். இது இரத்தம் சிந்தாத அமைதியான போராகும். இதில் மிகவும் விழிப்பு தேவை. நாங்கள் எதற்கும் தயாராக உள்ளோம்.

**பேட்டி: ராஜ்மோகன்.**

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஆற்றல்மிகு தோழர்களே!

**இன்று நாம் எதற்காகப் போராடுகின்றோம்?**
**எவற்றுக்காகப் போராட வேண்டியுள்ளது?**

எமது நீண்டகால நோக்கம் ஒரு சோஷலிசப் புரட்சியே எனினும் —

**அந்த நீண்டகால இலக்கை அடைவதற்கு இன்று உடனடியாக எம்முன்னால் உள்ள போராட்டங்கள் எவை என்பதை நாம் தெளிவுபடுத்திக்கொள்ளுதல் அவசியமாகும்.**

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மக்களின் அடிப்படையான ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டத்தையும்.

கடந்த ஐந்து ஆண்டு காலத்தில் ஏற்பட்ட அழிவுகளை புனரமைப்பதற்கான புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான வேலைத் திட்டத்தையும் முன்வைக்கின்றது.

இந்த இரண்டோடும் தொடர்பாகவே அமைப்பின் அடிப்படைத் தேவையை வலியுறுத்துகிறது.

நாம் எதிர்காலத்தில் உழைக்கும் மக்களின் புரட்சியை ஏற்படுத்த வேண்டுமானால்,

தொழிலாள வர்க்கத்தின் ஆட்சி உருவாகும் நிலையைத் தோற்றுவிக்க வேண்டுமானால்

இன்று மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டத்தை நடத்தியே ஆக வேண்டும்.

நாம் ஜனநாயகம் என்னும்போது சிலர், சோஷலிசமும் உண்மையான ஜனநாயகமும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கப்பட முடியாதவை என்பதைச் சொல்லி -

ஒன்றில்லாமல் ஒன்றில்லை என்னும் வாதத்தை நடத்த முற்படுகின்றனர்.

நாங்கள் இங்கே ஜனநாயகம் என்பதை வெறும் கருத்துருவகக் கண்ணோட்டத்தில் பேசவில்லை.

இன்றைய சமுதாய வளர்ச்சி நிலையின் காலகட்டத்தோடு தொடர்புபடுத்தியே பேசுகிறோம்.

இன்று எமது மக்களுக்கு மிகவும் அடிப்படையான ஜனநாயக உரிமைதனே மிகவும் அடிப்படைத் தேவையாக உள்ளன.

இந்த உரிமைகள் வென்றெடுக்கப்படாமல்,

இந்த உரிமைகளை வென்றெடுப்பதற்கான போராட்டம் நடத்தப்படாமல் -

எமது சமுதாயத்தை அடுத்த புரட்சிகர கட்டத்தை நோக்கி நகர்த்தவே முடியாது.

**தோழர்களே !**

நாம மாக்ஸியத்தை உதும்போது வதற்காகவோ,

அல்லது எமக்கும் மாக்ஸியச் சொற்பதங்கள் தெரியும் என்பதை மற்றவர்களுக்குக் காட்டிக்கொள்வதற்காகவோ அதனைக் கற்றவர்கள் அல்ல.

மாக்ஸிசம் என்பது ஒருவழிகாட்டி ஞானம்.

புரட்சியைப் பற்றிய சரியானதும் முறையானதுமான அறிவையும் வழிகாட்டலையும் அது தருகிறது.

சமுதாயத்தின் ஒரு காலகட்ட வளர்ச்சி நிலையின் தேவையிலிருந்து அந்தக் காலகட்டத்திற்கான போராட்டமும் அமையும்.

அவையல்லாத போராட்டங்கள் மக்களிலிருந்து அந்நியப்பட்டவையாகவே அமையும்.

இனி -

முதலில் ஒருகுறிப்பிட்ட காலகட்டத்தின் சமுதாய வளர்ச்சிநிலை பற்றிய யதார்த்தபூர்வமான புறநிலை ஆய்வு தேவை.

இரண்டாவதாக, அக்காலகட்டத்தின் சமுதாய நிலை என்ன தேவையை நோக்கி நிற்கின்றது என்பதை அடையாளம் காண்பது அவசியம்.

மூன்றாவதாக, அத்தேவைகளை அடையாளம் காண்பதிலிருந்து போராட்டங்களை வரையறை செய்துகொள்வது கட்டாயம்.

நான்காவதாக, அக்குறிப்பிட்ட காலகட்டத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய போராட்டங்களை அடையாளம் காணுவதிலிருந்து நட்புசக்திகளையும் எதிரிசக்திகளையும் தெளிவாக இனம் பிரித்துக்கொள்வது பிரதானம்.

## தோழர்களே...

இந் நான்கு விடயங்களிலும் செம்மையான தெளிவான முடிவுகள் இருந்தால்தான் -

போராட்ட இலக்குகளை வென்றெடுப்பதற்கான மூல உபாயங்களையும் தந்திரோபாயங்களையும் வகை செய்யவும் நடைமுறையாக்கவும் முடியும்.

எழுந்தமானமாக நேர்மை, தூய்மை, போர்க்குணம் என்பவற்றின் பேரால் எல்லாவற்றையும் எதிர்த்தல்,

எல்லாவற்றிற்கு எதிராகவும் எல்லா நேரத்திலும் போராடுதல் என்பது குருட்டுத்தனமானதும் வரட்டுத்தனமானதுமாகும்.

இந்த அதிதீவிரப் போக்கைக் கடைப்பிடிப்பவர்கள் ஒன்றில் அதிதீவிர வலதுசாரி சந்தர்ப்பவாதிகள் ஆகின்றார்கள்.

அல்லது -

எல்லாமே பிழை, எல்லாருமே பிழையானவர்கள் என்று சொல்லிக்கொண்டு அரசியலை விட்டு ஒதுங்கிவிடுகிறார்கள்.

வைச்சால் குடுமி அடிச்சால் மொட்டை என நாம் செயற்பட முடியாது.

எமது நீண்டகால இலக்கை நோக்கி நாம் நடைபோடுவதற்கு, இன்று எமக்கு முன்னால் உள்ள வரலாற்றுக் கடமை என்ன என்பதில் எமக்கு ஏற்படும் தெளிவுதான் -

எம்மைச் சரியான பாதையில் இட்டுச் செல்லும்;

எமது வரலாற்றுப் பங்கை சரியாக நிறைவேற்ற வழிவகுக்கும்.

ஈழவிடுதலையே தமது இறுதி இலட்சியம் என்று நினைத்துக் கொண்டு கடந்தகாலப் போராட்டத்தில் இணைந்துகொண்ட பலர் -

காலத்தின் மாற்றத்தை ஜீரணிக்க முடியாமலும்,

புதிய தேவைகளைப் புரிந்து கொள்ள முடியாமலும் ஒதுங்கிக் கொண்டு விட்டார்கள்;

சிலர் நாட்டை விட்டே ஓடிவிட்டார்கள்.

ஆயுதந் தாங்கியபடி நடந்த போராட்டத்தை சோஷலிசம் புரட்சி என வேறொரு கோணத்தில் சிந்தித்து இணைந்த சிலர் -

ஏமாற்றத்துக்கும் விரக்திக்கும் உள்ளாகி, தமது அறியாமையைக் கண்டுகொள்ள ஆற்றலில்லாமல் மற்றவர்கள்மேல் பழியைச் சுமத்திக் கொண்டு அமைதியாகப் போய்விட்டார்கள்.

இன்னொரு பகுதியினருக்கு - ஆயுதம் தாங்கிய போராட்டத்தில் பழக்கப்பட்டுப் போனவர்களுக்கு,

சமாதானம் என்ற சொல்லைக் காதால் கேட்பதற்குக் கூட வெறுப்பாயிருக்கின்றது.

சிலர் ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டம் என்பது சோஷலிசப் புரட்சிக்கு எதிரான - எதிர்ப் புரட்சிகர நடவடிக்கை என்று விளங்கிக் கொள்கிறார்கள்.

இப்படியாக, பலவகையான தவறான போக்குடையவர்களை இந்தக் காலகட்டத்தில் கண்டுகொள்ள வேண்டியிருக்கின்றது.

இது தவிர்க்க முடியாததாகும்.

குழப்பமான கருத்துக்களுக்கு இரையாகிப் போயிருக்கும் சக்திகள், தமது குழப்பங்களைத் தீர்த்துக் கொள்வதற்கான வழிகளைத் தேடிக் கொள்ளாமல்,

மாறாக -

ஸ்தாபன வேலைத்திட்டங்களில் முனைப்போடு ஈடுபட்டிருக்கும் தோழர்களைக் குழப்புவதிலேயே கூடுதலான அக்கறை செலுத்திவருவதையும் நாம் காணமுடிகின்றது.

அதையொட்டி நாம் விழிப்பாகவும் தெளிவாகவும் இருப்பது அவசியமாகும்.

அடுத்து,

எமது மக்களின் ஜனநாயக உரிமைகளுக்காகப் போராடுதல் என்பது இரு பிரதான விடயங்களை உள்ளடக்கியிருக்கின்றது.

ஒன்று, தமிழ் மக்களுக்கு உள்ளேயே தோன்றியிருக்கும் ஜனநாயக விரோத சக்திகளிடமிருந்து மக்களை விடுவிப்பது.

இரண்டாவது, சிறீலங்கா அரசினால் மறுக்கப்படும் ஜனநாயக உரிமைகளுக்காகப் போராடுவது.

**அன்பார்ந்த தோழர்களே !**

இன்றைக்கு எமது மக்களின் உரிமைகளுக்காக நாம் சிறீலங்கா அரசுக்கு எதிராகப் போராட வேண்டுமாயின் -

எமது மக்கள் மத்தியில் ஒற்றுமை வேண்டும்;

எமது மக்கள் மத்தியில் அரசியல் இயக்கம் நடத்தப்படுவதற்கான ஜனநாயக உரிமை வேண்டும்.

ஆனால், இன்றைக்கு தமிழ் மக்கள் மத்தியில் நடைபெறுவது -

கொலை வெறியர்களும், கொள்ளை வெறியர்களும், அதிகார வெறியர்களும் தமது சுயநல நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக-

மக்களைத் துன்புறுத்துகின்றன,

அடக்குகின்றன,

கொலைகளே மலிந்து போயிருக்கின்றது.

தமிழ் மக்கள் மத்தியிலுள்ள ஜனநாயக முற்போக்கு சக்திகள் வாய்பேசா ஊமைகளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த நிலைக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும்.

அப்போதுதான் சிறீலங்கா அரசுக்கு எதிரான ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டத்தைத் தமிழ் மக்கள் முனைப்போடு முன்னெடுக்க முடியும்.

தமிழ் மக்களின் எதிரிகள் தமிழ் மக்களினுடைய உரிமைகளுக்கான போராட்டம் சரியான வழியில் எழுச்சிபெறவிடாமல் அடக்குவதற்காக -

கொலைகார, கொள்ளைக்கார கும்பல்களுக்கு மறைமுகமாக எல்லா வகையான உதவிகளையும் வழங்கி வருகிறார்கள்.

எனவே, இந்தக் கோடரிக்காம்புகளை மக்கள் இனங்கண்டு துரத்தியடிக்கும் நிலையை நாம் உருவாக்க வேண்டும்.

தமிழ் மக்கள், இந்தியப்படையின் தவறுகளைத் தட்டிக் கேட்க முடிகின்றது;

ஆனால் -

புலிகளும் மற்றும் சதிகாரக் கும்பல்களும் தமிழ் மக்களின் குரல்வளையை நசுக்கி வருகின்றார்கள்;

தமது அரசியல் வியாபாரத்திற்காக கொலை செய்து குவித்து வருகிறார்கள்.

எனவே, தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டத்தில் மிகவும் முக்கியமாக,

தமிழ் மக்களுக்கு உள்ளேயே இருந்து செயற்படும் ஜனநாயக விரோத சக்திகளுக்கு எதிராகப் போராட வேண்டியிருக்கின்றது.

இதேவேளை,

தமிழ் மக்களின் தேசிய இன உரிமைகளை வென்றெடுக்கும் விடயத்தில் சிறீலங்கா அரசுக்கு எதிரா -

1- சிறையிலுள்ள இளைஞர்களை விடுதலை செய்யக்கோரிப் போராடுதல்,

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

2- மலையக மக்களின் வாக்குரிமை மற்றும் குடியுரிமை விடயத்தில் மேற் கொள்ளப்பட்டுவரும் ஏமாற்று நாடகங்களுக்கு எதிராகப் போராடுதல்.

3- வடக்கு - கிழக்கு ஒருங்கிணைந்த மாகாண சபைக்காகவும், அந்த மாகாணசபையின் அதிகாரங்கள் உயர்ந்தபட்சம் அதிகரிக்கப்படுவதற்காகவும் போராடுதல்.

4- அகதிகளாக்கப்பட்ட எமது மக்களின் புனர்வாழ்வு, புனரமைப்பு தொடர்பான உரிமைகளுக்காகப் போராடுதல்.

5- சிறீலங்கா இராணுவத்தினாலும், சிங்களக் காடையர்களினாலும் இன்னும் அவ்வப்போது தமிழ் மக்களுக்கு ஏற்படும் ஆபத்து தொடர்பான பாதுகாப்பு உரிமைகளுக்காகப் போராடுதல் . . . . . .

ஆகிய விடயங்களை நாம் முன்னெடுத்தல் வேண்டும்.

இதேவேளை, இந்தியப் படைகள் ஆங்காங்கே அடிக்கடி விடும் தவறுகள், மக்களுக்கு ஏற்படுத்தும் துன்புறுத்தல்கள் தொடர்பாகக் குரல் எழுப்புதல் - போராடுதல் என்பதை மேற்கொள்ளுதல் வேண்டும்

தோழர்கள் ஒவ்வொருவரும் கொண்டிருக்கும் உறுதியும் தெளிவுமே எமது ஸ்தாபனத்தின் வளர்ச்சிக்கும் பலத்திற்கும் வழிவகுக்கும்.

புலிகளையும் மற்றும் கொள்ளையர்களையும் கட்டுப்பாட்டில் கொண்டுவந்திருக்கும் பகுதிகளில் எமது ஏனைய அரசியல் வேலைத் திட்டங்களையும்,

ஸ்தாபனரீதியான வேலைத் திட்டங்களையும் நாம் துரிதமாக முன்னெடுத்தல் வேண்டும்.

புலிகளும் மற்றும் கொள்ளையர்களும் இன்னும் வெறியாட்டம் போடும் பகுதிகளில் அவர்கள் கொட்டத்தை அடக்கி,

அங்கு ஜனநாயக சூழலை உருவாக்கி

மக்கள் சுதந்திரமாக தமது கருத்துக்களைப் பேசவும் நடமாடவுமான நிலைமையை ஏற்படுத்துவதற்கான மூலோபாயங்கள் தந்திரோபாயங்களை வகுத்து அவற்றை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

அமைதி
ஜனநாயகம்.
புனரமைப்பு
இதுவே எமது இன்றைய வேலைத் திட்டங்களின் அடிப்படைகளாகட்டும்!

## சிங்கள மக்களுக்கு நாம் ......

(...... 2 ம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கள மக்களின் ஆதரவு இல்லாமையால்தான் - சிங்கள மக்களில் பெரும்பான்மையினர் சிங்கள பௌத்த பெருந்தேசியவாத மாயைக்குள் அகப்பட்டுக் கிடந்தபடியால்தான் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் தமிழ்மக்கள் நடத்திய ஈழவிடுதலைப் போராட்டம் ஒரு கட்டத்திற்குமேல் முன்னேற முடியாமற் போய்விட்டது.

அதேபோலவே, தமிழ்மக்களின் ஆதரவு இல்லாவிட்டால்-தமிழ்மக்கள் குறுகிய தமிழ்த்தேசிய மாயைக்குள் அகப்பட்டுக்கிடந்தால் — சிங்களமக்களின் போராட்டங்களும் ஒரு கட்டத்திற்குமேல் முன்னேற முடியாமல் போய்விடும்.

சிங்களமக்களும் தமிழ்மக்களும் ஒற்றுமைப்பட்ட போராட்டம் ஒன்று எழவேண்டுமாக இருந்தால், தமிழ் மக்களின் பாதுகாப்பை சிங்களமக்கள் உத்தரவாதம் செய்தல் வேண்டும். தமிழ்மக்களின் நியாயபூர்வமான அடிப்படை உரிமைகளை அங்கீகரித்தல் வேண்டும்.

தமிழ்மக்களின் நியாயபூர்வமான உரிமைகளுக்கான - பாதுகாப்புக்கான போராட்டங்களை நிபந்தனையின்றி ஆதரிக்கும்படி சிங்களமக்களைக் கேட்டுக்கொள்ளும் அதேசமயம், அவ் ஆதரவை வெறும் அநுதாபத்தின் அடிப்படையில் வழங்கும்படி — நாம் கோரவில்லை.

மாறாக, சிங்கள உழைக்கும் மக்களின் விடுதலைக்கான போராட்டம் முன்னேற வேண்டுமானால், தமிழ் உழைக்கும் மக்களுடனான ஒற்றுமை அவசியமாகும்.

இருபகுதி உழைக்கும் மக்களுக்குமிடையில் ஒற்றுமை ஏற்படவேண்டுமானால், தமிழ்மக்களின் அடிப்படை உரிமைகளுக்காக - பாதுகாப்பிற்காக சிங்களமக்கள் சிறீலங்கா முதலாளித்துவ அரசுக்கெதிராகப் போராட வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும்.

## கோடைப் பயணத்தின் தேவை - நிழல்கள்

ஒருபக்கம் முதலாளித்துவ அரசயந்திரங்களின் அடக்குமுறைக் கொடுரங்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற அதேவேளை, மறுபக்கம் வடக்கிலும் தெற்கிலும் பாசிசக் குழுக்கள் முற்போக்கு சக்திகளுக்கெதிராக காட்டுமிராண்டித்தனமாக தலையை விரித்தாடுகின்றன.

வடக்கில் தமிழீழ விடுதலைப் புலிகள் பாசிசமும், தெற்கில் ஜனதா விமுக்திப் பெரமுன பாசிசமும் செயற்படுகின்றன.

இந்தப் பாசிசக் குழுக்களின் பயங்கரவாதக் கொடூரங்களினால் ஜனநாயகத்துக்கான - முற்போக்கான சமுதாய மாற்றங்களுக்கான போராட்டங்கள் முன்னணிக்கு வரமுடியாமல் இருக்கின்றன.

எந்தப்பக்கம் பார்த்தாலும் காட்டுமிராண்டித்தனமான கொடுரங்களும் அடக்குமுறைகளும் கொலைகளுமே மலிந்திருக்கின்றன.

அதனால்தான் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாம் கூறுகின்றோம்; இப்போது மக்களுக்குத் தேவை அமைதி, ஜனநாயகம், ஒற்றுமை என்று.

இன்றைய எல்லாத் தேவைகளுக்கும் எதிர்காலத்தை நோக்கிய தேவைகளுக்கும் இந்த மூன்றுமே இப்போது மக்களுக்குத் தேவையாக உள்ளது.

## மெட்டு ஒன்று பாடல்கள் மூன்று

இலங்கை - இந்திய உடன்படிக்கை கைச்சாத்தானதைத் தொடர்ந்து தெற்கில் உள்ள இனவெறிச் சக்திகள் தமிழ்மக்களுக்கு எதிராகக் குரலெழுப்புகின்றன.

சிங்கள பௌத்த தேசிய இனவெறியாளர்கள், தமது பணிகளைச் சாத்தியமாக்கிக் கொள்ளும்வகையில்

(-- தொடர்ச்சி 8 ம் பக்கம்......)

# இழப்புகள் ஒன்றும் மறப்பதற்கில்லை...



தோழர் சின்னவன்
(செல்வராசா)
கந்தளாய்



தோழர் பீற்றர்
(உதயகுமார்)
கந்தளாய்



தோழர் மதி
(தர்மகுலசிங்கம்)
திருமலை



தோழர் ராஜன்
(சிதம்பரநாதன்)
திருமலை



தோழர் ராஜு
திருமலை



தோழர் ராஜி
திருமலை



தோழர் மைக்கல்
(இளமன்)
திருமலை



தோழர் பயில்வான்
(நற்குணராசா)
கந்தளாய்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

[illegible]

வெளியீடு—5 1988 ஆடி 01.

## சிங்கள மக்களுக்கு நாம்......

(...... 7 ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி என்னை வைத்திருக்கிறது: மக்கள் விடுதலை முன்னணி நெருப்பை மூட்டுகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரவெறியின் அன்றும் இடதுசாரி முற்போக்கு ஜனநாயக சக்திகள் வேட்டையாடப்படுகின்றனர்; தமக்குத் தாமே தேசபக்தர்கள் என முத்திரை குத்திக் கொள்கின்றனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், மக்கள் விடுதலை முன்னணியும், தமிழீழ விடுதலைப் புலிகளும் ஒரே வேலையையே வெவ்வேறு பாஷையில் வெவ்வேறு களத்தில் நின்று செய்துகொண்டு இருக்கின்றனர்

இவை மூன்றினதும் தேவை என்ன?

மக்களுக்கு ஜனநாயகம் இருக்கக் கூடாது;

தமிழ்-சிங்கள மக்கள் மத்தியில் ஒற்றுமை ஏற்பட்டுவிடக்கூடாது:

மக்களுக்குள் சமாதானமான வாழ்வு உருவாகக் கூடாது;

அதன் மூலம் தாம் அதிகாரத்துக்கு வருவது;

பதவியைப் பிடித்துக் கொள்வது;

மக்களின் சொத்துக்களைக் கொள்ளையடித்துக் கொள்வது, ......... என்பதுதான்

இதைத் தமிழ் மக்களும் சரி, சிங்கள மக்களும் சரி தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

### வரலாற்றின் பிரம்மாக்கள்

இந்த நாடு ஏகாதிபத்திய முதலாளிகளின் வேட்டைக்காடாகியுள்ளது.

இந்த நாட்டு மக்களுக்குக் கிடைத்திருப்பது வேலையின்மையும், விலைவாசி ஏற்றமும், வறுமையும், அகதிவாழ்வும், சாவுகளும்தான்.

இவற்றை இல்லாதொழிக்க வேண்டுமானால், உழைக்கும் மக்கள் அனைவரதும் விடுதலையை உண்மையானதாக ஆக்கவேண்டுமானால்,

அதிகார வர்க்கத்திற்கெதிராகவும், இனவெறிக்குழுக்களுக்கெதிராகவும் மக்கள் தயவுதாட்சண்யமின்றிப் போராடுதல் வேண்டும்.

அதற்காக நாடுமுழுவதும் பரந்திருக்கும் தொழிலாளர்கள், விவசாயிகள், முற்போக்கு ஜனநாயக சக்திகள் அனைவரும் ஒருங்கு திரண்டு போராட வேண்டும்.

நாளு எல்லாம் மனதும் என்பது பழைய பொய்யாகும்.

வரலாற்றைப் படைக்க-வரலாற்றை மாற்ற மக்கள் எழவேண்டும்.

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர்வாழ்வளிப்போம்! அழிக்கப்பட்ட எம்தேசத்தை புனரமைப்போம்!

1977ம் ஆண்டு தொடக்கம் நடைபெற்ற தமிழின எதிர்ப்புக் கலவரங்களினாலும், அரசபடைகளின் நடவடிக்கைகளினாலும், இயக்கங்களின் செயற்பாடுகளினாலும் பாதிக்கப்பட்டவர்கள் ஒவ்வொருவரும் இவ்விபரத்திரட்டுப் பத்திரத்தில் கேட்கப்பட்டுள்ள விபரங்களை பூரணமாகவும் தெளிவாகவும் எழுதி, எமது தொடர்பகங்களுக்கு நேரடியாகவோ, தபால் மூலமோ அனுப்பிவைக்கவும்.

◎ பாதிக்கப்பட்ட குடும்ப விபரம் :

(1)— குடும்பத் தலைவரின் பெயரும் முகவரியும்.
(2)— குடும்பத்தில் உள்ள உறுப்பினர்களின் பெயர்கள், வயது, தொழில், தொழில் செய்யும் இடம்.
(3)— படித்துக்கொண்டிருக்கும் பிள்ளைகளின் விபரம்.
(4)— குடும்பத்தின் பொருளாதாரத் தராதரம்.
(5)— ஏதாவது ஒரு இயக்கத்தோடு தொடர்பாக அல்லது ஆதரவாக இருந்திருந்தால் அதன் விபரம்.

◎ ஏற்பட்ட பாதிப்பின் விபரம் :

(1)— உயிர்கள் பாதிக்கப்பட்டிருந்தால் — பெயர், வயது, எப்போது, காரணம், இடம்.
(2)— சொத்துக்கள் பாதிக்கப்பட்டிருந்தால் — யாரால், எப்போது .... பாதிக்கப்பட்ட சொத்துக்களின் விபரம், அண்ணளவான பெறுமதி.
(3)— உடல் ஊனம் ஏற்படுத்தப்பட்டிருந்தால் — பாதிப்பின் விபரம், யாரால், எப்போது.
(4)— யாராவது வேலையிழந்திருந்தால் — வேலை விபரம், இழப்பின் காரணம்.
(5)— குடும்பத் தலைவரை இழந்திருந்தால் — இழப்பின் காரணம், எப்போது, அவர் செய்த தொழில், இடம், வருமானம்.

◎ கைது செய்யப்பட்டுச் சிறையிலுள்ளவர்கள் யாராவது இருந்தால் :
— பெயர், எப்போது, எந்தச் சிறையிலுள்ளார்.

◎ குடும்ப அங்கத்தவர் யாராவது விடுதலை இயக்க உறுப்பினராயிருந்தால் :
— பெயர், எந்த இயக்கத்தில், எப்போது இணைந்தார், இப்போது அவரின் நிலை.

மேற்குறிப்பிட்டுக் கேட்கப்பட்டுள்ள விடயங்கள் பற்றி முடிந்தளவு விபரமாகவும் தெளிவாகவும் எழுதி விரைவாக அனுப்பிவைக்கவும். எமது தொடர்பகங்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்வது மிகவும் நன்று.

பாதிக்கப்பட்ட எம்மக்களுக்குப் புனர்வாழ்வளிப்பதிலும், அழிக்கப்பட்ட எம்தேசத்தைப் புனரமைப்பதிலும் அக்கறையுள்ள ஒவ்வொரு இளைஞரும் இவ்விபரத்திரட்டு விடயத்தில் ஆர்வத்துடன் செயற்பட வேண்டுமென அழைப்பு விடுக்கிறோம்.

இயக்குனர்
அகதிகள் புனர்வாழ்வுப் பிரிவு

### தொடர்பு முகவரிகள் :

EPRLF தொடர்பகம்,
இல. 9, லேக் றோட்,
மட்டக்களப்பு.

EPRLF தொடர்பகம்,
குசைப்பிள்ளையார் குளம்,
வவுனியா.

EPRLF தொடர்பகம்,
இல. 52, கங்கவீதி,
திருகோணமலை.

EPRLF தொடர்பகம்,
'ராஜபவனம்'
அஞ்சலகம் எதிரில்,
மன்னார்.

**ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி EPRLF**

கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் திரு. அ. வ. அருண்மொழித்தேவன் அவர்களினால் 119, பல்கலைக் கழகவீதி, ரத்தனபிட்டிய, பொரலஸ்கமுவ - பி. ஆர். பி. அச்சகத்தில் 01. 07. 1988 அன்று அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்